www.tamilarangam.net

# தமிழ் ஈழ ராணுவம்

# TAMIL EELAM ARMY

# கண்ணன் வரமாட்டான்

ஈழமக்களின் தலைவிதி கொழும்பு, டில்லி, திம்பு, பஹாமாஸ் எல்லாம் போய்விட்டு தற்சமயம் ஓமான் ஊடாக டாக்கா செல்லவுள்ளது. இந்திய சிறிலங்கா அரசாங்கத் தலைவர்கள் ஈழ மக்களின் உரிமைகளை வழங்குவதற்குப் பதிலாக எமக்கு பூகோள பாடம் படிப்பிக்கிறார்கள் போல் தான் தெரிகிறது. இல்லையென்றால் ஏன் எமது பிரச்சினையை அன்னிய தலைநகர்களெங்கும் தம்முடன் கொண்டு சுற்றுலா போகிறார்கள்.

எமது மக்களுக்கு இந்த தெருக்கூத்தின் முடிவில் இல்லை. அன்னிய தலைநகர் கூத்தின் முடிவில் சுயநிர்ணய உரிமை கிட்டுதோ இல்லையோ ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம். பூகோள பாடத்தில் எமது மக்கள் தேறிவிடுவார்கள்.

எமது மக்களின் தலைவிதி இப்படி உலகம் சுற்றிக்கொண்டிருக்கும் போது இங்கு நாம் என்ன தான் செய்துகொண்டிருக்கின்றோம்.

- **வாணி விழாவை கோலாகலமாக கொண்டாடிவிட்டோம்.**
- **தீபாவளியை எண்ணெய்தேய்த்துக் குளித்து கோடி உடுத்தி மாமிச விருந்துண்டு மகிழ்ந்தாயிற்று.**
- **அடுத்துவரும் நத்தார் பண்டிகையையும் கேக் வெட்டி உண்டு களிக்கத்தான் போகிறோம்.**
- **புதுவருடமும் வெகு தூரத்தில் இல்லை. அதையும் குடித்து வெறித்து வரவேற்கத்தானுள்ளோம்.**
- **பொங்கி மகிழ்ந்து கரும்புண்பதற்கு தைப் பொங்கலும் விரைவில் வரத்தான் போகிறது.**

ஆமாம் பண்டிகை சீசனை வெகுவிமரிசையாக கொண்டாட ஆரம்பித்துவிட்டோம்.

தமிழ் நாட்டின் பட்டி தொட்டியெல்லாம் தெருநாய்கள் போல் எம் மக்கள் அகதிகளாக அலைகிறார்கள்.

இந்திய அகதி முகாம்களில் தம் குடும்பத்தை காப்பாற்றுவதற்காக தமிழ் பெண்கள் விபச்சாரத்தில் ஈடுபடுகிறார்கள்.

எமது மக்கள் எம் மண்ணிலேயே உயிர், உறைவிடம், உடைமை, உழைப்பு, உறவினர்களை இழந்து அகதிகளாக அடை மழையிலும் பேய்க்காற்றின் மத்தியிலும் வாடுகின்றார்கள்

உங்கள் விடுதலைக்காக ஆயுதமேந்தி போராடிய போராளிகளில் ஆயிரம் பேருக்கு மேல் தொகுதி இன்று பூசா, வெலிக்கடை, தங்காலை, கோட்டை இன்னும் பல இராணுவப் பொலிஸ் சிறைகளில் தினமும் சித்திரவதைப்பட்டு நலிவடைகிறார்கள்.

நம் நாட்டின் தென்பகுதி சிறீலங்கா ஆக்கிரமிப்பாளர்களினால் சூறையாடப்பட்டு தீயில் வேகிறது.

அகதி முகாம்களில் தஞ்சமடைந்த எம் மக்கள் அங்கு கூட கொல்லப்படுகிறார்கள்.

ஒன்றரை வருடம் இராணுவ முகாமில் சிறைவைக்கப்பட்டு, கொடுமைகள் பல இழைக்கப்பட்டு குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்படுகிறாள் தென் ஈழ இளந்தமிழ்ப் பெண் மீ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்வளவிற்கும் மத்தியில் இந்த கேளிக்கைகள், கொண்டாட்டங்கள் எதற்கு இந்த கோயில் திருவிழாக்கள், திருமண வைபவங்கள், பண்டிகைக் கொண்டாட்டங்கள்,

ரோமபுரி பற்றி எரியும் போது வயலின் வாசித்தானாம் நீரோ மன்னன் கதைபோல தென் ஈழம் பற்றி எரியும் போது தீபாவளியைக் கொண்டாடினார்களாம் வட ஈழ மக்கள்.

மக்களே சற்று சிந்தியுங்கள். எம் மக்கள் தினந்தோறும் படும் வேதனைகளை, துயரங்களை எண்ணிப் பாருங்கள். இந்த விழாக்கோலங்கள், ஊதாரித்தனங்கள் உண்மையில் எமக்கு இக்கால கட்டத்தில் அவசியந்தானா? எங்கள் நாடே அலங்கோலப்படும் போது எங்கள் வீட்டிற்கேன் கோலங்களும், தீபங்களும்.

எமது குடும்பத்தில் யாராவது மோசம் போனால் குறைந்தது ஒரு வருடமாவது விழாக்களையும், வைபவங்களையும் ஒதுக்கி ஒத்தி வைத்துவிட்டு துக்கம் அனுஷ்டிப்பது எமது மரபு. பின்பு ஏன் வீட்டுக்கு ஒரு நியதி நாட்டுக்கு ஒரு நியதி.

எம் ஈழத்தாய் நாட்டில் தினமும் எம் சகோதரர்கள் படுகொலையாவது உங்களுக்குத் தெரியவில்லையா? அல்லது படுகொலையானவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் உங்கள் உறவினரில்லையா? படுகொலையானவர்களின் உறவினர்கள் வேண்டுமானால் வருடம் பூரா துக்கம் அனுஷ்டிக்கட்டும். இதற்கெல்லாம் பாதிக்கப்படாத நாம் ஏன் அலட்டிக்கொள்ள வேண்டும் என்பதுதான் உங்கள் கொள்கையா? பாதிக்கப்பட்டவர்கள் மாத்திரம் தான் போராட வேண்டுமா? உங்கள் உணர்வுகள் மரத்துப் போய் விட்டனவா? உங்கள் மனிதாபிமானம், மனச்சாட்சி உறங்கி விட்டனவா? இல்லை என்றால்!

**பின்பு ஏன் இந்த கூத்தும் கும்மாளமும்.**

உலக மக்களை இம்சித்து வதைத்த நரகாசுரனை துவம்சம் செய்து மக்களை இரட்சிக்க கண்ணன் அவதரித்தாராம்.

**இதுதான் தீபாவளியின் தத்துவமாம்**

ஈழ மக்களை வதைக்கும் ஜே. ஆர் ஜெயவர்த்தனா அன்ட் கோ. வை கொன்றொழிக்க கண்ணன் மீண்டும் அவதரிக்க வேண்டுமாம்.

அதற்காகத்தானும் இந்த ஆராதனைகளும் கொண்டாட்டங்களும்.

**மக்களே உங்கள் விடுதலையை கண்ணபிரானிடம் ஒப்படைத்து விட்டு எங்கும் ஓடி ஒழித்து விடாதீர்கள். தன் தலைவிதியை தன் கையில் எடுத்துக் கொள்ளாத எந்த மக்களும் உருப்பட்டதாக வரலாறு இல்லை. உங்கள் விடுதலைக்காக நீங்களே போராட வேண்டும். வேறு நாட்டவரோ அன்றி தெய்வமோ உங்கள் கடமையை நிறைவேற்றாது. முயற்சி செய்யும் மக்களுக்கே தெய்வம் உதவி செய்யும்.**

கண்ணன் ஒருவன் தோன்றாமலா போய் விடுவான் என்று வாளாவிருந்து விடாதீர்கள்

**கண்ணன் வரமாட்டான்**

"மண் மீட்பு இல்லையேல்
வீர உயிர் துறப்பு"

18 11-1985

**தமிழ் ஈழ ராணுவம்**
**தமிழ் ஈழம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்